# மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினைக்கு உடனடி பரிகாரம் காண்பீர்

## மாநகர் மேயரிடம் மாற்றுத்திறனாளிகள் சங்கங்கள் மகஜர்






(ஆர்.குணா)

கோலாலம்பூர், மார்ச் 13- மாற்றுத்திறனாளிகளின் நலன்களை பாதுகாக்கவும் பராமரிக்கவும் உடனடி பரிகார நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று 50க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளும் ஏழு அரசு சாரா அமைப்புகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் தலைமை அலுவலகத்திற்கு முன்பு ஆட்சேப ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மாநகர் மன்றம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இவர்கள் ஆர்ப்பாட்ட குரலெழுப்பினர்.

மாற்றுத்திறனாளிக்கு ஏற்பட்ட நிலைமை படுதுயரமான ஒன்று. இவர் இப்போது எந்த வேலையும் செய்ய இயலாத நிலை. பிரிக்பீல்ட்ஸ் வாழும் பார்வையற்றவர்களின் எண்ணிக்கை 380க்கு மேல். இவர்களில் பாதுகாப்பு மகா முக்கியம்.

எனவே இவர்களின் நலனில் முதன்மை கவனம் செலுத்த வேண்டும். ஆர்ப்பாட்டக்காரர்கள் கோலாலம்பூர் மாநகர் மேயர் டத்தோஸ்ரீ மைமுனா முகமது ஷாரிப்பிடம் மகஜர் ஒன்றை சமர்ப்பித்தனர்.

பிரிக்பீல்ட்சில் வட்டாரத்தில் அடிப்படை வசதிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக இவர்கள் தங்களின் மகஜரில் தெரிவித்துள்ளனர் மலேசியாவில் மாற்றுத்திறனாளிகளின் தன்நிலை பயிற்சி நிலையத்தின் தலைவர் ஜி.பிரான்சிஸ் சிவா தனது சங்கத்தின் நிலைப்பாட்டினை விவரித்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்திற்கு உகந்த இடமாக பிரிக்பீல்ட்சை உருவாக்குவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இப்பகுதியில் மாற்றுத்திறனாளிகள் பாதுகாப்பாக நடமாடுவதற்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் அநேக ஆக்ககரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பாதசாரிகளின் நடைபாதை பாதுகாப்பாக இருக்க வேண்டும். பலமுறை மாற்றுத்திறனாளிகளின் பரிதாபங்களை எடுத்துரைத்துள்ளோம்.

எனினும் கோலாலம்பூர் மாநகர் மன்றம் மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று மலேசிய பார்வையற்றோர் சங்கத்தின் தலைமை செயல்முறை அதிகாரி டத்தோ ஜார்ஜ் தோமஸ் வலியுறுத்தினார்.